**செய்தி வெளியீடு எண்: 422** **நாள்: 02.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (2.7.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நாகப்பட்டினம், கரூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 86 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 சேமிப்பு கிடங்குகள் மற்றும் 16 நெல் சேமிப்பு சைலோ கொள்கலன்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை, இணையதளத்தில் விற்பனை செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள www.mangalammasala.com என்ற வலைத்தளம் மற்றும் கைபேசி செயலி ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 6.5.2013 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து, உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில் புதிதாக கிடங்குகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், பொதும்பு கிராமத்தில் 2 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு சேமிப்புக் கிடங்கு; கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், தென்னிலை கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள் மற்றும் கடவூர் வட்டம், மேலப்பகுதி கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள்; நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம் மாணிக்கப்பங்கு கிராமத்தில் 14 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள்;

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், எருக்கூர் கிராமத்தில் 64 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 16 நெல் சேமிப்பு சைலோ கொள்கலன்கள்;

என மொத்தம் 86 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 சேமிப்பு கிடங்குகள் மற்றும் 16 நெல் சேமிப்பு சைலோ கொள்கலன்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் **1960–**ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு முதல் விவசாய அங்கத்தினர்களின் விளைபொருளான மஞ்சளை சந்தைப்படுத்தி நல்ல விலையில் விற்பனை செய்திட தேவையான வசதிகளை செய்து வருகிறது. இச்சங்கம் உறுப்பினர்களிடமிருந்து தரமான மஞ்சளை கொள்முதல் செய்து மதிப்பு கூட்டி "**மங்களம் மஞ்சள் தூள்**" என்ற வர்த்தக பெயரில் **2015–**ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்து வருகிறது. மேலும், குங்குமம், மிளகாய்த்தூள், மல்லித்தூள், சாம்பார்பொடி மற்றும் ரசப்பொடி ஆகிய பொருட்களையும் மங்களம் என்ற வர்த்தகப் பெயரில் குறைந்த விலையில் நிறைந்த தரத்தில் விற்பனை செய்து வருகிறது.

நவீன தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி மேற்கண்ட பொருட்களின் விற்பனையை மேம்படுத்திடும் வகையிலும், நுகர்வோர் இப்பொருட்களை இணையதளம் மூலம் வாங்கி, இணையதளம் மூலமாகவே விற்பனைத் தொகையினை செலுத்திடும் வகையிலும், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள www.mangalammasala.com என்ற வலைத்தளம் மற்றும் "Mangalam Masala" கைபேசி செயலி (Mobile App) ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். பிற கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்பனை செய்யப்படும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களையும் இந்த வலைத்தளம் மூலம் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.ஆர். காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மு. சுதா தேவி, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணைச் செயலாளர் திருமதி எஸ். வளர்மதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 2.7.2018